PHONE No. 35650

REGD. No. M. 6311

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 202

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: தைமீ 23உ வெள்ளி (5—2—54) ★ ★ ★ வெளியூர்: தைமீ 24உ சனி (6—2—54)

பம்பாய் ஆதிக்க வெறிக்கு எதிர்ப்பு!

—(:)—

பிரச்னை உயர் நீதி மன்றம் ஏறிவிட்டது!

—(:)—

பம்பாய் கல்விக் கழகத்தின் தீவிரம்

பம்பாய் சர்க்கார் ஆங்கிலத்தைப் போதனா மொழியாகக் கொண்ட பொதுவாக எல்லாப் பள்ளிகளுக்கும் குறிப்பாக ஆங்கிலோ — இந்தியப் பள்ளிகளுக்கும் விசித்திரமான கட்டளை ஒன்றைப் பிறப்பித்திருந்தனர். ஆங்கிலோ—இந்தியராக இல்லாத பிள்ளைகளையும், மற்ற ஆசிய சந்ததியில் பிறந்தப் பிள்ளைகளையும், அப்பள்ளிகளில் சேர்க்கக் கூடாது என்பதே அந்த உத்திரவின் சாரமாகும். அதை வலியுறுத்தி சுற்றறிக்கை ஒன்றையும் பம்பாய் சர்க்கார் விடுத்திருந்தது.

இந்த உத்தரவு இந்திய அரசியல் சட்டத்தில் உள்ள 14, 15(1), 19 (1) (எ) (ஜி), 343 (2) (3), 345, 346, 347, 348 ஆகிய பிரிவுகளுக்கு முரணானது என்று எடுத்துக்காட்டி, சர்க்கார் உத்திரவிற்கு எதிராக, பம்பாய் உயர் நீதிமன்றத்தில் பம்பாய் கல்விக் கழகம் ஒரு வழக்கைத் தொடுத்து இருக்கிறது.

இந்த எதிர் மனுவை உயர் நீதி மன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது.

ஈரானில் கைகலப்பு

இராணுவச் சட்டம் அமுல்

டெஹரான், பிப். 5—

பாரசீக செனட் சபைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க நடந்த தேர்தலில் முசாதிக்கின் ஆதரவாளர்களும், ஷா ஆதரவாளர்களும் பந்தோபஸ்து போலீசார் மீது கைக்குண்டுகளை வீசி அவர்களின் ஆயுதங்களை பிடுங்க முயற்சித்தனர். இராணுவச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டிருந்த நேரத்தில் இரு தரப்பினருக்கும் கைகலப்பு ஏற்பட்டதால், துருப்புகள் சுட்டன; இதனால், ஒருவர் கொல்லப்பட்டார், பலர் காயமடைந்தனர்.

நேரு வருகை எதிரொலி

தி. மு. கழகத் தோழர்கள் நால்வர் கைது

பாலக்காடு, பிப். 4—

தேர்தல் பிரசாரத்திற்காகப் பண்டித நேரு கொச்சியிலிருந்து திருச்சூருக்கு இன்று மாலை கொல்லங்கோடு வழியாக போக வேண்டியிருந்ததால், கோளத்திலுள்ள கொல்லங்கோடு தி. மு. கழகத்தைச் சேர்ந்த நால்வரை போலீசார் கைது செய்திருக்கின்றனர். அவர்களைக் கைது செய்ததற்கு தடுப்புக் காவல் சட்டம் காரணமாகக் காட்டப்படுகிறது.

அந்த வட்டாரத்திலுள்ள தி. மு. கழக அனுதாபிகளிடை இச்சம்பவம் மிகுந்த பரபரப்பைக் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

கைது செய்யப்பட்டோர்:—ஆர். இலக்குமணன்—கொல்லங்கோடு தி. மு. கழகச் செயலாளர்; எம். கே. சிவராம்—பொருளாளர்; ஏ. ஆர். சந்திரன்—துணைச் செயலாளர்; ஏ. எஸ். சரவணன்—செயற் குழு உறுப்பினர்.

பெரியார் மீது வழக்கு

உயர் நீதிமன்றத்தில் அப்பீல்

திருச்சி, பிப். 3—

பெரியார்மீது தொடரப்பட்டிருந்த பிள்ளையார் பொம்மை உடைப்பு வழக்கை திருச்சி மாவட்ட நீதிபதி தள்ளுபடி செய்ததை எதிர்த்து திருச்சி நாத்திக எதிர்ப்புக் கமிட்டியார் சென்னை உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்ய முடிவு செய்திருக்கின்றனர்.

சென்ற வருஷம் முதல் 10 மாதங்களில் பாகிஸ்தானில் 4,61,87,000 பவுண்டு தேயிலை உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.

தி. மு. கழக பொதுக் குழுக் கூட்டம்

★

தி. மு. கழகப் பொதுக் குழுக் கூட்டம் 7—3—1954 ஞாயிறன்று திருச்சியில் கூடும். விபரம் அடுத்த அறிக்கையில்.

சென்னை, 5-2-54.

சி. என். அண்ணாதுரை,
பொதுச் செயலாளர்.

ஜெர்மனியின் பிளவு நிலை

நீடிக்கச் செய்ய டல்லஸ் மறுப்பு!

பெர்லின், பிப். 4—

ஜெர்மனி முழுவதற்கும் தற்காலிகமாக சர்க்கார் அமைக்கவும், சுதந்திரமான தேர்தல் நடத்தவும் கோரி இன்று பெர்லின் மாநாட்டில் ரஷிய வெளிநாட்டிலாகா மந்திரி மாலடோவ் புதுப் பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

'ஐரோப்பிய இராணுவம்' என்ற சூழ்ச்சியைக் கொண்டு வர பிரிட்டனும்-அமெரிக்காவும், மருத்துவம் செய்வதாக நேற்றைய கூட்டத்தில் மாலடோவ் கூறினார்.

"ஐரோப்பிய இராணுவத் திட்டத்தை ஜெர்மனி முழுதும் விஸ்தரிக்க பான்—பாரிஸ் ஒப்பந்தங்கள் வழி செய்வதாகவும், அது ஜெர்மானியரின் நலனுக்கும், ஐரோப்பிய பந்தோபஸ்துக்கும் பாதகமாகும்" என்றும் மாலடோவ் கூறினார்.

"ஜெர்மனியை ஐக்கியப்படுத்த வேண்டிய காலம் வந்துவிட்டதென்றும் இன்னும் பிளவுபட்ட நிலையை நீடிக்கவிட்டால் பேராபத்து ஏற்படும்." என்றும் அமெரிக்கப் பிரதிநிதி டல்லஸ் கூறினார்.

மதுவிலக்கைக் கைவிடுமாறு சிபாரிசு!

அதோனி, பிப். 3—

புதிதாகத் தொடங்கியுள்ள ஆந்திர மாநிலத்தின் நிதி நிலையைக் கருதி மதுவிலக்கைக் கைவிட ஆந்திர சர்க்கார் கைவிட்டுவிட வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை அதோனி நகராட்சி மன்றம் ஒரு தீர்மானத்தைத் தனது அவசரக் கூட்டத்தில் நிறைவேற்றி இருக்கிறது.

கும்பமேளா வரலாற்றில் குருதிக்கறை படிந்தது!

—o—

மயானக்கரையில் மாமுனிவர்களின் மந்திரங்களாம்!

கும்பநகர், பிப். 4—

கும்பமேளா விழாவில், ஜன நெருக்கடியால் மிதித்து நசுக்கப்பட்டவர்கள் எண்ணிக்கையே அதிகமென்றும், 1,000 பேருக்குக் குறையாதென்றும் சொல்லப்படுகிறது.

போரெனக் குவிக்கப்பட்டிருந்த பிணங்கள் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. தகனத்திற்கு மட்டும் 1,000 மணங்கு விறகு செலவாயிற்றாம். உயிரிழந்தவர்களின் உற்றார் உறவினர்கள் 'ஓ' வெனக் கதறி அழுது கண்ணீர் கொட்டிய சோகக்காட்சி கண்டவர் உள்ளத்தை விட்டு என்றென்றும் அழியாதாம்.

இறந்தவர்களில் அடையாளம் கண்டுபிடிக்கப்பட முடியாதவர்களின் சடலங்களை புகைப்படம் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. சடலங்கள் சிதையில் வைக்கப்பட்டபோது வேத மந்திரங்கள் ஓதப்பட்டன.

நாகர்களின் நிர்வாண ஊர்வலம் நதிக்கரை யோரமாகப் போய்க்கொண்டிருக்கையில் ஏககாலத்தில் நாலு திக்குகளிலுமிருந்தும் வந்து சேர்ந்த மக்கள் திரள் மோதியதின் காரணம் தான் இந்தப் பயங்கர நிகழ்ச்சிக்குக் காரணம் எனச் சொல்லப்படுகிறது.

சவால்—ஓர் சோதனை!

பாட்னா, பிப். 5—

"பாகிஸ்தானுக்கு அமெரிக்கா இராணுவ உதவியை அளிக்க முன்வருவது இந்தியரின் தேசபக்திக்கும், பெருமைக்கும் விடப்படும் சவாலேயாகும்," என்று பீகார் கவர்னர் ஆர். ஆர். திவாகர் பீகார் சட்டசபை வரவு-செலவுக் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

பங்கீடு காரியாலய முன்னாள் சிப்பந்தி கைது

சென்னை, பிப். 3—

பங்கீடு டிஷெரி 'செலான்' களில அதிகாரிகளின் கள்ளக் கையெழுத்திட்டு, ரூ 4,000 பெறுமான 112 கோதுமை மூட்டைகளைக் கடத்தியதற்காக பங்கீடு காரியாலய முன்னாள் சிப்பந்தி ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். சென்னை கலெக்டர் காரியாலயத்தில், இம்மாதிரி கள்ளக் கையெழுத்திட்டு ஏமாற்றப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை.

சர்க்கார் கட்டுப்பாடுகளைக் கண்காணிக்கக் காங்கிரஸ் கட்சியினரா?

சொந்தக் கட்சியினருக்கு பம்பாய் சர்க்கார் காட்டும் சலுகை

அகமதாபாத், பிப். 5—

அகமதாபாத்திலும், மேகனா மாவட்டங்களிலும் உள்ள "காங்கிரஸ் கட்சியினர் கட்டுப்பாடு பொருட்களான இரும்பு, சிமெண்ட் போன்ற பொருட்களை வினியோகிப்பதில் அநேக வெறுக்கத் தகுந்த ஊழல்களைச் செய்திருக்கிறார்கள்."

"அங்கு கட்டுப்பாட்டைக் கண்காணிக்கும் பொறுப்பு ஒழுக்கமுடைய சர்க்கார் அதிகாரிகளிடம் இல்லை. அந்தப் பொறுப்பு காங்கிரஸ் கட்சியினரிடமே சர்க்காரால் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது."

—இவ்வாறு, குஜராத்தில் சுற்றுப்பிரயாணம் செய்த கிசான் மஸ்தூர் பிரஜா கட்சித் தலைவர் என். ஜி. ரங்கா கூறினார்.

ஆந்திர சர்க்காருக்கு தோல்வி

சென்னை, பிப். 4—

ஆந்திர மந்திரிகளின் சம்பள மசோதாவை கவர்னர் சட்டசபையின் பரிசீலனைக்கு அனுப்பியது தவறென்றும், அது செல்லாதென்றும் தாக்கல் செய்யப்பட்ட, 'ரிட்' மனுவை உயர் நீதி மன்ற நீதிபதி பாலகிருஷ்ண அய்யர் விசாரணைக்கு அனுமதித்து, எதிர்தரப்பினருக்கு நான்கு வார காலம் நோட்டீஸ் கொடுக்க உத்திரவிட்டார்.

ஆந்திர மந்திரிகள் ரூ. 1,000 சம்பளம் பெறுவதற்கு இடைக்கால தடையுத்தரவை பிறப்பிக்க வேண்டுமென்ற கோரிக்கையை இன்று நீதிபதி நிராகரித்தார்.

நம் நாடு

சென்னை 5—2—54 வெள்ளி

முதல் வெற்றி!

★

வடக்கு - தெற்கு பிரச்னை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. இந்தத் துணைக் கண்டத்தின் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டே அந்தப் பிரச்னை இருந்து வருகிறது. சில காலத்தில் அந்தப் பிரச்னை பெருகுக் கொண்டு தோன்றியும், வேறு சில காலத்தில் குறுகி மங்கியும் வந்திருக்கிறதேயல்லாது, அடியோடு பிரச்னை மறைந்தொழிந்து விட்டது என்று நாட்டுநடப்புத் தெரிந்த எவரும் சொல்லத் துணியார். நீர்பூத்த நெருப்புப் போலத்தான் அந்தப் பிரச்னை என்றும் இருந்து வந்திருக்கிறது என்ற பெரும் உண்மையை மறைக்கப் பார்ப்பதும், காண மறுப்பதும் பிரச்னையை நட்பு முறையில் தீர்ப்பதற்கான பரிகாரமாக என்றும் அமையப் போவது கிடையாது. எரிமலை என்றைக்கேனும் ஒருநாளைக்கு தீப்பிழம்பை உமிழ்ந்துதான் தீரும் என்பதில் ஒருவரும் ஐயம் கொள்ளத் தேவையேயில்லை.

ஆரியம்—திராவிடம் என்று வரையறுக்கப்பட்ட இரண்டு பெரும் கலாச்சாரத்தின் அடிப்படையில் உள்ள முரண்பாட்டின் எதிரொலிதான் இந்த வடக்கு—தெற்குப் பிரச்சினை என்பதை டெல்லி ஏகாதிபத்தியம் திட்டவட்டமாக ஒப்புக்கொண்டு, திராவிட இனக் கோரிக்கைக்குச் செவி சாய்த்து, நியாயமான முறைகளினால், இந்த அடிப்படை முரண்பாட்டில் இருந்து இயல்பாகக் கிளம்பும் சிக்கலைத் தீர்த்து வைக்க மனம் கொண்டாலன்றி, அப்படி ஒரு பிரச்சினையும் அறவே கிடையாது என்று மறுத்தோ, ஆசை காட்டியோ, அச்சமூட்டியோ அடக்கிவிடலாம் அல்லது தற்காலிகமாக ஒழித்துவிடலாம் என்று எண்ணுவது அடிகட்டின பேதைமையேயாகும். காங்கிரசின் தற்சரிதையே இந்த மகத்தான உண்மையைத்தான் கலங்கலற விளக்கமாகக் காட்டிக் கொண்டு இருக்கிறது. சுய அனுபவத்தைக்கூட டெல்லி ஏகாதிபத்தியம் இதற்குள்ளாக மறந்துவிட்டிருக்கிறது என்பதை, அதன் நடைமுறை காட்டிக்கொண்டு இருக்கிறது. இந்த மறதிக்கு ஒரே ஒரு காரணம்தான் உண்டு. தன் கையில் சிக்கிய அதிகாரம், திராவிட இன மக்களின் ஒருமித்த சக்தியைக் காட்டிலும், மகாமகா பெரும் வன்மை கொண்டுள்ள சக்தி என்று டெல்லி ஏகாதிபத்தியம் தப்புக் கணக்குப் போட்டிருப்பதேயாகும்.

'வடகோடி தாழ்ந்து தென்கோடி உயர்ந்துவிட்டது அதைச் சமன்செய்ய அகத்தியர் தென்னாட்டிற்கு அனுப்பப்பட்டார்,' என்று, வடமொழி புராணம் கூறுகிறது. இது வெறும் புனைந்துரையாகவும் இருக்கலாம் அல்லது வரலாற்று உண்மையாகவும் இருக்கலாம். அந்தக் கதை எந்தப் பட்டியலில் சேர்ந்தது என்பதைக் குறித்து நமக்குக் கவலை இல்லை. ஆனால் கூறப்படும் அகத்தியர் அமைதியான படையெடுப்பில் மறைந்து கிடக்கிற உண்மைபற்றிதான் நாம் பெரிதும் கவலை கொள்ளுகிறோம். திராவிட மக்களும் அதைக் கருத்தூன்றி ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். நிற்க,

திராவிட நாடு கோரிக்கையை நாம் கிளப்பினபோது அதைப் பரவவிடாமல் தடுத்துவிட்டாலே அது பிறந்த கணமே இறந்துபடும் எனத் தேசிய ஏடுகள் கட்டுப்பாடாக இருட்டடித்து வந்தன. காங்கிரஸ் நாயகர்களும் துவக்கத்தில் கோரிக்கையை அலட்சியமாகவே கருதி வந்தனர். ஆனால், பிரச்னை, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக, ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடி, அரசியல் சூதாடிகளின் கண்ணிலும், கருத்திலும் உறுத்த ஆரம்பித்துவிட்டது. தேசிய ஏடுகளும் வேண்டாவெறுப்பாகவாவது தங்கள் தொழில் வளர்ச்சி நோக்கம் கொண்டு, திராவிட நாடு செய்திகளைச் சுருக்கியாவது போட வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு வந்துவிட்டன.

தேசிய ஏடுகளும், காங்கிரஸ் கனவான்களும் பொருட்படுத்தாமல் விட்டுவருவதனாலேயே, நமது கோரிக்கைத் தானாக மரித்துவிடும் என்று ஆரம்பத்தில் நம்பியது வெறும் பகற்கனவாகப் போய்விட்டது. எனவே, பிரிவினை லட்சியத்தைத் தாக்கியும், வையண்டி செய்தும் பேசுதலின் மூலம், தொலைத்துவிடலாம் என்று, தாங்கள் கொண்ட முதல் கருத்துக்கு முரணாக, பிறகு கொண்ட நடைமுறையும் விரும்பிய பலனைக் கொடுக்கவில்லை. பிரிவினை எண்ணத்தை வேரறுக்க அவர்கள் மேற்கொண்ட தூற்றல் பிரசார முறை, அவர்கள் விரும்பினதற்கு மாறான பலனை, நமது கோரிக்கைக்குச் சாதகமாக்கி விட்டது. அதாவது, அவர்களுடைய கேலியும், வசைமொழியும் நமது லட்சிய வளர்ச்சிக்கு, நமது முயற்சியால் ஏற்படும் பலனைக் காட்டிலும், அதிகமான ஆக்கத்தைப் ஊக்கத்தையும் தந்துவிட்டது.

அவர்களுடைய விஷப் பிரசாரத்தால் நாம் வேகமாக வளருவதைக் கண்டதும், நம்மை நேரடியாகத் தாக்கவும் நமது குருதியைக் குடிக்கவும், காங்கிரசிலுள்ள சில பல களபதிகளுக்கு, கலகமதிகளிலெல்லாம் தலைசிறந்த கலகமதியான அமைச்சர் ஆச்சாரியார், தாயமிட்டும் பார்த்தார். வெளிப்படையாக இந்த அக்கிரமத்தை அவர் செய்திருக்கிறார். இதுகண்டு நாம் அஞ்சவுமில்லை—அறப்போர் களத்திலிருந்து புறம் காட்டவுமில்லை. காங்கிரஸ் களபதிகள் தாக்கினர்—நம்மவர் தாங்கிக்கொண்டனர். நமது குருதி மண்ணிலே குழைந்தது. நாம் சிந்திய ரத்தத்தால் நமது லட்சியம் சிவப்பேறி புனிதமடைந்து விட்டது.

காங்கிரஸ் களபதிகளின் கழுத்தறுப்புப் பணியினாலும் நமது லட்சியம் சிதைந்துவிடவில்லை. முன்னிலும் பன்மடங்கு உரம்பெற்று வளர்ந்து வருவதை அமைச்சர் ஆச்சாரியார் போன்ற கலகபதிகளே வயிற்றெரிச்சலோடு கண்டு, வெட்கத்தால் தலையைத் தொங்கப்போட்டிருக்கிறார்கள்!

நமது லட்சியத்தைக் குலைக்க அமைச்சர் ஆச்சாரியார், சர்க்கார் முதல்வர் என்ற முறையில், நம்மீது வீசிய அடக்குமுறைகளும், சிறைத் தண்டனைகளும் மரித்துப்போன சம்பவங்களாகும். எனவே, அதுபற்றி இந்த முறையும் எழுதாமல் விடுவதே விரும்பத்தக்கதாகும்.

குடத்திற்குள்ளிட்ட விளக்காக இருந்த திராவிட நாடு கோரிக்கை இப்பொழுது குன்றில் மேல் ஏற்றிவைத்த ஒளி விளக்காக மாறிப்போய் இருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு அதாவது, 'குக்கல்கள் குலைத்துக்கொண்டே இருந்தாலும் ஒட்டகக் கூட்டம் போய்க்கொண்டே இருக்கும்' என்பது போல, நமது லட்சியத்தைக் குலைக்க எவர் எம்மொழி கொண்டுத் தூற்றினாலும், நமது லட்சியம் தினே தினே வளர்ந்து கொண்டு இருக்கும் என்பதுதான்.

டெல்லி ஏகாதிபத்தியம், நமது லட்சியத்தைத் தொலைத்துவிடலாம் என்ற நச்சு நினைப்போடு, புது டெல்லியில் கூடுகின்ற பார்லிமெண்டு கூட்டத்தில் ஒன்று இரண்டை, ஒவ்வொரு ஆண்டும் பங்களூரில் கூட்டுவது என்று ஆலோசித்துக்கொண்டு இருக்கிறதாம். இதற்காக பங்களூரில் கட்டப்படும் சட்டசபைக் கட்டிடம் போதிய வசதிகொண்டதாக இருக்குமாம். இது நடைமுறைக்கு வருமா வராதா என்பது இன்னும் உறுதியாகத் தெரியவில்லை. இந்த இடமாற்று நாடகத்தின் மூல நோக்கம் வடக்கு—தெற்கு பேதத்தைப் போக்குவதுதானாம்!

இதைக் காட்டிலும் தீவிரமான யோசனை ஒன்றை, இரண்டு தினங்களுக்கு முன்னால், பார்லிமெண்டுத் துணைத் தலைவர் அனந்தசயனம் அய்யங்கார் கூறி இருந்தார். யூனியன் சர்க்காரின் சில இலாக்காக்களையே ஐதராபாத்திற்கு நிரந்தரமாக மாற்றிவிட வேண்டுமென அவர் யோசனை கூறி இருந்தார்.

வடக்கு—தெற்கு பேதத்திற்கே இடம் கிடையாது என்று பசப்பி, முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்த்தவர்கள், இப்படி ஒரு தீர்க்கப்பட வேண்டிய பிரச்னை இருக்கிறது, அதுவும் தீவிரமாக வளர்ந்து வருகிறது என்று ஒப்புக்கொள்ள முன்வந்தது கண்டு நாம் மகிழ்கிறோம்.

உண்மையான நிலைமையைத் தெரிந்துகொண்டு, பலன்தராதப் பரிகாரத்தை மேற்கொள்ளுவதாக இருந்தாலும், ஏதாவது பரிகாரம் தேடியாக வேண்டும் என்று டில்லி ஏகாதிபத்தியம் முன்வந்து இருப்பது, நமது கோரிக்கைக்குக் கிடைத்துள்ள அறவழி வெற்றியேயாகும்.

இதையே நமது முதல் வெற்றி என்போம். எனவே, நமது திராவிடநாடு கோரிக்கை, குன்றின்மேல் ஏற்றிய ஒளி விளக்காகக் காட்சி அளிப்பது கண்டு பூரிப்படையாத திராவிடர் ஒருவரும் இருக்க முடியாதென்றே நம்புகிறோம்.

தலைநகரிலேயே தகிடுதத்தமா?

காங்கிரஸ் எம். எல். ஏ. கண்டனம்

புதுடில்லி, பிப். 4—

"இந்நகர் ஜைன ஆலயத்தில் அரிஜனங்களை அனுமதிக்க மறுத்தது அரசியல் சட்டத்தையே மீறுவதாகும். இந்தியாவின் தலைநகரிலேயே இம்மாதிரி நடந்தால் கிராமாந்திரங்களில் அரிஜனங்கள் கதி என்னவாக இருக்கும்? கோயில் நிர்வாகிகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன்வர வேண்டும்" என்று, காங்கிரசு எம். எல். ஏ.-யும், அரிஜனத் தலைவருமான பகத்அமீன்சந்த் கூறியுள்ளார்.

எகிப்தில் மாதர்கள் முன்னேற்றம்

பூரண உரிமைகளைப் பெற முயற்சி

கெய்ரோ, பிப். 5—

எகிப்தில் மாதர்கள் முன்னேற்றம் இருந்து வருகிறதென்றாலும், இன்னும் ஓட்டுரிமை அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

சீக்கிரமே இந்த உரிமை அவர்களுக்கு அளிக்கப்படலாம் என்று தெரிகிறது. 21 வயதிற்கு மேற்பட்ட மாதர்கள் வோட் செய்யும் உரிமை எகிப்திய அரசியலில் இடம் பெற்றுவிடலாம்.

கல்லூரி பட்டதாரிகளின் பொறுப்பு!

—[o]—

ஜூலியன் அக்ஸ்லியின் கருத்து

பாட்னா, பிப். 2—

"தற்கால புதிய உலகப் போக்கை நன்கு அறிந்துகொண்டு, அந்த அறிவை மனித சமுதாயப் பிரச்னைகளைத் தீர்க்கப் பயன்படுத்தி, மனிதனின் இறுதி நலனைப்பெற வகைதேடவேண்டும். கல்லூரிப் பயிற்சி பெற்றுள்ள ஆணுக்கும் பெண்ணுக்கும் இத்துறையில் அதிகமான பொறுப்பிருக்கிறது."

—இவ்வாறு, கல்லூரி மாணவர்கள்—ஆசிரியர்களிடை நடைபெற்ற கூட்டமொன்றில் உயிர்நூல் புலவரும், நூலாசிரியருமான பேராசிரியர் ஜூலியன் அக்ஸ்லி அவர்கள் "உள்ளது சிறத்தலும் நவீன எண்ணமும்" என்னும் பொருள்பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மார்க்ஸ் தத்துவத்தைப் பற்றி அவர் குறிப்பிடும்பொழுது அவர் கூறியதாவது:—

"மார்க்ஸ் தத்துவத்தில் உள்ள ஒரு சிறப்பு என்னவென்றால், அது, விஞ்ஞான சிந்தனையால் உருவாக்கப்பட்டுள்ளது என்பதாகும். ஆனால் அது பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் இருந்த விஞ்ஞான சிந்தனையினால் உருவாக்கப்பட்ட ஒரு பிடிவாதக் கோட்பாடு ஆகும் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும்."

மனிதனுடைய வளர்ச்சியையும், பலகாலக் கட்டத்திலும் வளர்ந்து வந்த விஞ்ஞானக் கருத்து பற்றியும் அக்ஸ்லி குறிப்பிடும் பொழுது சொன்னதாவது:—

"மனிதனுடைய வரலாற்றில், இப்பொழுதுதான் முதல் முறையாக உலகத்தின் முழு உருவமும் கிடைக்கப்பெறும் பருவம் தோன்றி இருக்கிறது. சில நூற்றாண்டுகளுக்கு முன், மனிதனை ஆராயப் புகுந்த விஞ்ஞானிகள் எல்லாம் அவனுடைய மூலத்தைக் கண்டறிவதிலேயே கருத்தைச் செலுத்தி வந்தனர். அவனுடைய எதிர்கால ஆக்கத்தை ஆராய முற்றிலுமாக அலட்சியப் படுத்தினர். மனிதரின் பூர்வப் பாரம்பரை என்று விளக்கப்பட்டவை அனைத்துமே பெரும்பாலும் மனிதரின் ஏற்றத்துக் காரணங்களையே கூறலாம்."

ஆங்கிலம் — இந்திய அகராதி

2-லட்சம் வார்த்தைகள் கொண்டதாம்!

பம்பாய், பிப். 5—

2 லட்சம் வார்த்தைகள் கொண்ட புதிய ஆங்கிலம்—இந்திய அகராதி ஜூலை மாதத்தில் பதிப்பிக்கப்படும் என்று தெரிகிறது.

பள்ளிக்கூடம், காலேஜ், வர்த்தக நிலையங்கள், சர்க்கார் நிர்வாகம் ஆகிய எல்லாவற்றிற்கும் பயன்படும்படி இந்த அகராதி அமைக்கப்பட்டுள்ளதாம்.

எல்லா இந்திய மொழிகளும் சமஸ்கிருதத்திலிருந்து பிரிந்ததாக இருப்பதால் புதிதாக அமைக்கப்பட்ட வார்த்தைகள் எந்த இந்திய மொழியில் வேண்டுமானாலும் உபயோகிக்கலாம் என்று கூறப்படுகிறது.

சென்ற 20 ஆண்டு காலங்களாக செய்யப்பட்ட ஆராய்ச்சியின் பலனாகவே இந்த அகராதி உருவாகியிருக்கிறதாம்.

ஏழை மாணவர்களுக்கு இலவசப் புத்தகங்கள்!

சென்னை, பிப். 5—

சென்னை நகர கலாசாலைகளில் படிக்கும் ஏழை மாணவர்களுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வாங்கித் தர உலக சர்வ கலாசாலை சர்வீஸ் ஏற்பாடு செய்திருக்கிறது.

பரீட்சைகள் முடிந்த பிறகு புத்தகங்களைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமே என்கிற நிபந்தனையின் பேரில் இப்புத்தகங்கள் கொடுக்கப்படுகிறதாம். இந்த வசதி ஜனவரி முதல் இருந்து வந்தபோதிலும் 6 பேர்கள்தான் இதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

கிராமங்களுக்கு மின்சார வசதி

சென்னை வழிகாட்டுகிறது!

சென்னை, பிப். 4—

கிராமங்களுக்கு மின்சார வசதி அளிப்பதில் இதர மாகாணங்களுக்கு வழிகாட்டியாக சென்னை மாகாணம் விளங்குகிறது.

இந்த மாகாணத்திலுள்ள சுமார் 19 491 கிராமங்களில் 2,000க்கு மேற்பட்ட கிராமங்களுக்கு மின்சார வசதிகள் ஏற்பட்டுவிட்டன.

தி. மு. க.-இளைஞர் காங்கிரஸ் வழக்கு

மதுரை, பிப். 4—

இந்நகர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தோழர்கள் ரத்தினம், மற்றும் நால்வர் மீதும், இளைஞர் காங்கிரசைச் சேர்ந்த கோவிந்தன், மற்றும் நால்வர் மீதும் வீதியில் சச்சரவு செய்து கொண்டதாகத் தொடரப்பட்ட வழக்கு டவுன் சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் 28-1-54ல் விசாரணைக்கு வந்தது.

வழக்கு விசாரணையின்போது, பி. 1 போலீஸ் ஸ்டேஷனில் உள்ள போலீஸ்காரர் ராஜாமணி என்பவர் சாட்சியமளித்தார். அவர் கூறியதாவது:—

"சம்பவம் நடந்தது எனக்குத் தெரியும்; அன்று நான் அம்மன் சந்நிதிக்குமுன் 'டியூடி'யில் இருந்தேன்; பகல் 3 மணி சுமாருக்கு அம்மன் சந்நிதியை நோக்கி தி. மு. கழகத்தினர் கொடிகளைத் தாங்கிக்கொண்டு ஒலி முழங்கிக்கொண்டு வந்தனர்; இளைஞர் காங்கிரசைச் சார்ந்தவர்களும் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி கொடிகளை ஏந்திக்கொண்டு வந்தனர். தி. மு. கழகத்தினர் தெற்கு முகமாகத் திரும்பினர்: அவர்கள் இளைஞர் காங்கிரஸ்காரர்களைக் கடந்து சென்றவுடன், இளைஞர் காங்கிரசைச் சேர்ந்தவர்கள் அருகில் உள்ள கடையில் சோடா புட்டிகளை எடுத்து ரோட்டில் எறிந்தார்கள்; தி. மு. கழகக் கூட்டத்திலேயே அவர்கள் சோடா புட்டிகளை எடுத்து வீசினார்கள்; கூட்டத்தில் இறந்துபோன கருப்பையா கம்பைச் சுமந்துகொண்டு தி. மு. கழகத்தினரை விரட்டினார்; சோடா புட்டிகளை வீசியவர்கள் யார் என்று அடையாளம் காட்ட இயலாது; கலகத்தைக் கண்டு நான் போலீசுக்குப் போன் செய்தேன்; லாரி வந்து இருதரப்பினரையும் ஸ்டேஷனுக்கு கொண்டு சென்றது; போலீசில் என்னையும் விசாரணை செய்தனர்."

இளைஞர் காங்கிரஸ் தரப்பு வக்கீல் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார். அப்போது சாட்சி கூறியதாவது:—

"இரண்டு கட்சிகளும் கலகம் செய்து கொண்டதாகத்தான் போலீஸ் புகாரில் கூறியிருக்கிறேன்; இளைஞர் காங்கிரஸ்காரர்கள்தான் தி. மு. கழகத்தினர் மீது சோடா புட்டிகளை வீசினர் என்று என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும்."

அடுத்து பி. 1 போலீஸ் ஸ்டேஷன் சப்-இன்ஸ்பெக்டர் முனிசாமி விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

"சம்பவ தினத்தன்று சுமார் 3 மணிக்கு என் ஸ்டேஷனைச் சேர்ந்த போலீஸ்காரர் ஒருவர் இளைஞர் காங்கிரஸ்காரர்களும், தி. மு. கழகத்தினரும் கலகம் செய்து கொள்வதாகப் போன் செய்தார்; நான் ஒரு போலீஸ் கோஷ்டியுடன் ஸ்தலத்திற்கு விரைந்தேன்; கலவரத்தில் சிலர் காயமடைந்திருந்தனர்; கலவரம் நடந்த இடத்தில் குற்றம் சாட்டப்பட்டிருப்பவர்களைக் கைது செய்தேன்; காயம்பட்டவர்களை ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக அனுப்பினேன். தி மு. கழகத்தினர் புகார் செய்வதற்காக ஸ்டேஷனுக்கு வந்திருந்தார்கள்; விசாரணை நடக்கும்போது இருகட்சியினரும் நெருங்கியே இருந்தனர்; தி. மு. கழகத்தினரில் சிலருக்குக் காயம் ஏற்பட்டிருந்தது; சோடா புட்டிகளால் பட்ட காயங்களே இருந்தன; இது சம்பந்தமாக வழக்கொன்று பதிவு செய்தேன்."

முதல் சாட்சியான போலீஸ்காரர் ராஜாமணியை தி. மு. கழகத் தரப்பு வக்கீல் குறுக்கு விசாரணை செய்தார். அப்போது சாட்சி கூறியதாவது.—

"கலகம் நடந்த இடத்தில் இளைஞர் காங்கிரசைச் சார்ந்தவர்கள் சுமார் 40 பேர்கள் இருந்திருப்பார்கள்; தி. மு. கழகத்தினர் எந்தவிதமான அசம்பாவிதமும் இல்லாமல் கொடிகளைப் பிடித்துக்கொண்டு, ஒலிகளை முழங்கிக்கொண்டு வந்தனர்; சம்பவத்திற்கு பிறகு இளைஞர் காங்கிரஸ்காரர்கள் கடுமையான முழக்கங்கள் எதுவும் போடவில்லை."

வழக்கு விசாரணை இத்துடன் முடிந்தது வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. தி. மு. கழகச் சார்பில் வழக்கறிஞர் ஆறுமுகமும், இளைஞர் காங்கிரஸ் சார்பில் வழக்கறிஞர் லட்சுமி நரசிம்மனும் ஆஜரானார்கள்.

பம்பாய் தாழ்த்தப்பட்டோர் இளைஞர் சம்மேளனம்

26—1—54 பகல் 2-30 மணியளவுக்கு வரலைமூக்கட்ட வாடி களக்காடு வட்ட சங்க அறையில் தோழர் கே. பி சீனிவாசன் தலைமையில் உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தாய் நாடு சென்றிருக்கும் தலைவர், செயலாளர் மூன்று செயற்குழு உறுப்பினர்களுக்குப் பதிலாக வேறு தோழர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

அ. இ. தபால்காரர் கீழ்த்தர சிப்பந்திகள் சங்கம்

வாணியம்பாடி, ஜன. 29—

அகில இந்திய தபால்காரர் கீழ்த்தர சிப்பந்திகள் சங்கம் வாணியம்பாடி கிளையின் 5-ம் ஆண்டு விழா நேற்று நடைபெற்றது. தோழர் கே. சீதாராமன் தலைமை வகித்தார். தோழர்கள் வி. அப்புசாமி. விசயராகவன், பி. எம். கிருஷ்ணன், டாக்டர் சி. சாதமுனி, சுந்தரேசன், எஸ். தங்கவேலு, எத்திராஜுலு, நாராயணன் மற்றும் பலர் சொற்பொழிவாற்றினர். பின்னர், செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

பெயர் மாற்றம்

மணப்பாறை தி. மு. கழகச் செயலாளர் தோழர் மாராச்சி தமது பெயரை பெ. மா. இளங்கீரன் எனவும், பொருளாளர் தோழர் ந. கோபாலகிருட்டினன் ந. செங்கீரன் எனவும் மாற்றிக்கொண்டார்கள்.

பம்பாய் தி.மு.கழக முதல் மாநாடு

மார்ச் 20, 21-ந் தேதிகளில் பம்பாயில் தி. மு. கழக முதல் மாநாடு நடைபெறும். பொதுச் செயலாளர் அண்ணாதுரை கலந்துகொள்வார்.

'பரப்பிரம்மம்.' 'நேருக்கு நேர்' என்ற இரு நாடகங்கள் நடைபெறும்.

பம்பாய் தி. மு. கழக சார்பில் 'முயற்சி' என்னும் மலர் வெளியிடப்படும்.

சீர்திருத்த திருமணங்கள்

7—2—54 காலை 10 மணியளவில் பாமக்குடியில், மதுரை முத்து அவர்கள் தலைமையில், தோழர் சோமசுந்தரம்—தோழியர் முத்து மீனாட்சி சீர்திருத்தத் திருமணம் நடைபெறும். தோழர்கள் இரெ. இளம்வழுதி, எம். அய்யாச்சாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

7—2—54 ஞாயிறு காலை 8 மணியிலிருந்து 9 மணியளவில், கொண்டலாம்பட்டியில் தி. மு. கழக துணைச் செயலாளர் தோழர் சே. வி. பழனிசாமி அவர்களுக்கும், தோழியர் ஜெபலட்சுமிக்கும் சீர்திருத்த திருமணம் மணமகன் இல்லத்தில், தோழர்கள் சி. பி. சிற்றரசு, ஈ. ஆர். கிருஷ்ணன் முன்னிலையில் நடைபெறும்.

திருமணம்

8—2—54 காலை 6 மணிக்குமேல், தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ. தலைமையில், தோழர் டி. ஆர் கண்ணனுக்கும், தோழியர் கண்ணகிக்கும், தென்பாலையில் திருமணம் நடைபெறும்.

இப்போதுள்ள திட்டம், பரிசீலனைக்குப் பின் அமுலுக்கு வரும் பட்சத்தில் ஆப்பிரிக்காவின் இப்பகுதியில் இரு இந்தியர்களும், ஒரு ஆப்பிரிக்கரும் மந்திரிகளாக நியமிக்கப்படுவது சாத்தியமாகலாம்.

திருப்புத்தூரில் ஈ. வெ. கி. சம்பத்

—(:)—

ஊராண்மைக் கழக வரவேற்பும் - பொதுக்கூட்டமும்

24—1—54 ஞாயிறன்று மாலை திருப்புத்தூர் (இராமநாதபுரம் மாவட்டம்) வைக்கம் வீரர் படிப்பக 24-வது ஆண்டு விழாவுக்காக இந்நு வந்திருந்த தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களை மாலை 4 மணிக்கு தென்மாப்பட்டு செந்தமிழ்ப் பொதுநிலைப் பள்ளியிலிருந்து நகரின் முக்கிய தெருக்கள் வழியாக ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டது. ஊர்முழுதும் தோரணங்கள், கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஆங்காங்கு பல மாணவர் கழகங்களாலும் தி.மு கழகக் கிளைகளாலும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

மாலை 5 மணிக்கு ஊராண்மைக் கழகக் கட்டிடத்தில் தோழர் அப்பாத்துரை (ஊராண்மைக் கழகத் தலைவர்) அவர்களால் தோழர் சம்பத் அவர்கட்கு வரவேற்பு மடல் வாசித்தளிக்கப்பட்டது.

பின்னர் மாலை 6 மணிக்கு நன்கு அலங்கரிக்கப்பட்ட திடலில், அருப்புக்கோட்டை தோழர் எம். என். ராமசாமி தலைமையில் ஆண்டுவிழா துவங்கியது. செயலாளர் ஆண்டறிக்கை படித்த பின், தலைவர் முன்னுரை கூறியதும் தோழர் எம்.ஆர். கணேசன் சொற்பொழிவாற்றினார்.

இறுதியாகத் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பேச எழுந்ததும், ஏராளமான மாலைகளும் வரவேற்புரைகளும் அளிக்கப்பட்டன.

தூத்துக்குடி வழக்கு நிதிக்காக இந்தால் படிப்பகம் ரூ 11; வைக்கம் வீரர் படிப்பகம் ரூ 21; ஆகமொத்தம் ரூ. 32 தோழர் சம்பத் அவர்களிடம் அளிக்கப்பட்டது.

இரவு 10 மணி வரை தோழர் சம்பத் அவர்கள், தி. மு. கழகத்தின் மும்முனைப் போராட்டம், நாட்டு விடுதலையின் அவசியம் பற்றி பேசினார். செயலாளர் நன்றி கூறினார்.

இரவு 11 மணிக்கு மதுரை எம். ஆர். கணேசன் குழுவினரின் கலாநிகழ்ச்சி நீண்டநேரம் நடைபெற்றது.

25-1-54 மாலை 5-30 மணிக்கு மதுரை அமெரிக்கன் கல்லூரித் திருவள்ளுவர் மன்றத்தில், தோழர் சௌந்தரராஜன் தலைமையில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் "கிழக்கும்—மேற்கும்" என்ற தலைப்பின்கீழ் சொற்பொழிவாற்றினார்.

உடுமலையில் தோழர் நெடுஞ்செழியன்

நகராண்மைக் கழகத்தின் சார்பில் வரவேற்பு

இவ்வூர் திருவள்ளுவர் மன்ற இரண்டாம் ஆண்டு விழாவும், கனகராசன் படிப்பக பொங்கல் விழாவும் 28—1—54ல், தோழர் மே. சி. சிதம்பரனார் தலைமையில் நடைபெற்றது. அது சமயம், தோழர் இரா. நெடுஞ்செழியன் ஓர் சொற்பொழிவாற்றினார். ஆயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்தனர்.

* * *

இவ்வூர் நகராண்மைக் கழக சார்பில் தோழர் நெடுஞ்செழியனுக்கு நகராண்மைக் கழக உபதலைவர் தோழர் பி. கானியப்பன் அவர்களால் ஓர் வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்பட்டது.

* * *

இவ்வூர் விசாலாட்சி மகளிர் கல்லூரியில், கல்லூரி ஸ்தாபகர் ஜி. வி. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில் தோழர் நெடுஞ்செழியன் ஓர் சொற்பொழிவாற்றினார்.

கழகச் செய்திகள்

★

புரையூரில் தி. மு. கழகத் துவக்கம்

1—2—54ல், இவ்வூரில் தி. மு கழக அமைப்புக் கூட்டம் மஜீத் திடலில் நடைபெற்றது.

செயலாளர்: தோழர் எம். கே. சித்தார்; துணைச்செயலாளர்: என். என். மணியன்; பொருளாளர்: பெ. குருசாமி; மாவட்டப் பிரதிநிதி: அ. முத்துசாமி; செயற்குழு உறுப்பினர்கள் பலர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நெடுஞ்செழியன் படிப்பகம்

1—2—54ல், கீழப்பூங்குடி தி. மு. கழகச் சார்பில், இவ்வூரில் நெடுஞ்செழியன் படிப்பகம் துவக்கப்பட்டது. தோழர் நெடுஞ்செழியன் அவர்களை அழைத்து கொடியேற்று விழாவும், பொதுக்கூட்டமும் நடத்துவது எனமுடிவு செய்யப்பட்டது.

—:-:—

சூளேசுவரன் பட்டியில் தி.மு.க. பொதுக்கூட்டம்

31—1—54 மாலை 6 மணிக்கு தோழர் க. மாரியப்பன் தலைமையில், தி. மு. கழகச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள்: ஏ. கே. சாமி, பி. கே. முத்து, துரைக்கண்ணன், மதுரை எம். ஆர். கணேசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கல்லக்குடி வழக்கில் தண்டனையடைந்த தோழர் கண்ணதாசன் முதலிய தோழர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்யும்படி அரசியலாரைக் கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பீர்மேடு தாலுக்கா தி. மு. கழகம்

செயற்குழு அவசரக் கூட்டம்

வண்டிப்பெரியார், பிப். 3—

29—1—54ல், தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் கழக மனையில் தோழர் கே. ஏ. மதியழகன் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம், நடைபெறவிருக்கிற திரு—கொச்சி பொதுத் தேர்தலில் தி மு. கழகத்தின் நிலைமை பற்றி பலர் தத்தம் கருத்தினை எடுத்துரைத்தனர்.

இறுதியில் இத் தேர்தலில் தாலுக்காக் கிளை எவ்வித பங்கும் பெறக் கூடாதென்றும், தி. காங்கிரஸ் அபேட்சகருக்கு எதிராகப் போட்டியிடும் திருவாங்கூர்—தமிழ் நாடு காங்கிரசுக்கோ, மற்றும் ஐக்கிய முன்னணிக்கோ ஒத்துழைப்பும், உடனிருந்து பணியாற்றவுதோ கூடாது என்று செயலாளர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, தேர்தல் காங்கிரசைத் தவிர்த்து எஞ்சியவற்றுள் மூன்று போக்குக் கொள்கைவிருக்கவே வாக்குரிமை வழங்குமாறுசெயற்குழு ஆதரிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

செம்பியம் தி. மு. கழகம்

குறள் வகுப்புத் துவக்கம்

31-1-54 காலை 9-15 மணிக்கு கழக இல்லத்தில், (115 கடைத் தெரு) குறள் வகுப்புத் தொடக்கக் கூட்டம் நடைபெற்றது. ஆசிரியர் ச. மாணிக்கனார் அவர்களால் "இறை மாட்சி" என்ற அதிகாரம் விளக்கப்பட்டது. ஒவ்வொரு ஞாயிறு மாலையும் காலை 9-15 முதல் 10-15 மணி வரை குறள் வகுப்பு நடைபெறும்.

கீழப்பாவூர் தி.மு. கழகம்

31—1—54-ல், இவ்வூர் தி. மு. கழகப் பொதுக்குழு தோழர் ஜே. பி. மணி தலைமையில் நடைபெற்றது. சென்ற கூட்ட நடவடிக்கைகளும், பொங்கல் விழாக் கூட்ட வரவு—செலவுகளும் ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்னர், தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

காரைக்குடி தி.மு. கழகம்

31—1—54-ல், கழக செயற்குழு அவசரக் கூட்டம் நடைபெற்றபோது, புதிய கல்வித் திட்டத்தை திரும்பப் பெறக் கோரியும், எம். என். ராய் பிரிவுக்கு வருந்தியும், தோழர் கண்ணதாசன் குழுவினரின் தண்டனையைக் கண்டித்தும், தூத்துக்குடி சதி வழக்கிற்கு நிதி சேகரித்து அனுப்புவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

திருப்பூர் தி. மா. மு. கழகம்

31—1—54 மாலை 4 மணிக்கு செயற்குழுக் கூட்டம் வாலிபாலயம் தொழிலாளர் பகுத்தறிவுப் படிப்பகத்தில் தோழர் துரைசாமி தலைமையில் நடைபெற்றது. அதுபோது தோழர் அன்புத்தம்பியின் ராஜினாமா அங்கீகரிக்கப்பட்டு, தோழர்கள் கொங்குச் செல்வன் செயலாளராகவும், அ. மதியழகன் துணைச் செயலாளராகவும், இராசமாணிக்கம் பொருளாளராகவும், மு. இர. இராமசாமி, ஞானசுந்தரம், ஆறுமுகம் முறையே மாவட்டப் பிரதிநிதிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 12 பேர் கொண்ட செயற் கமிட்டி அமைக்கப்பட்டது. தோழர்கள் துரைசாமி, கொங்குச் செல்வன், இராசமாணிக்கம், ஞானசுந்தரம் ஆறுமுகம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள் தோழர் மதியழகன் நன்றி கூறினார்.

பட்டுக்கோட்டை திருக்குறள் கழகம்

இந்நகர் திருக்குறள் கழகத்தின் சார்பில் 24—1—54 ஞாயிறன்று அறிஞர் கட்டிடத்தில் திருக்குறள் வகுப்பை சி. இலக்குவனார் துவக்கி வைத்தார். 31—1—54ல் 'நாடு' என்னும் பொருள் பற்றி சி. இலக்குவனார் பேசினார்.

சென்னையில் அரிசி விலை குறையும்

அதிகாரிகளுக்கு உத்திரவு

சென்னை, பிப். 5—

தென் ஆற்காடு மாவட்டத்திலிருந்தும், மதுரை மாவட்டத்திலிருந்தும் மற்ற மாவட்டங்களுக்கு அரிசி போக்குவரத்தைத் தாராளமாக அனுமதிப்பதற்கு, சர்க்கார் உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர். எந்தவிதமானத் தடங்கலும் இல்லாமல், அரிசிப் போக்குவரத்தை அனுமதிக்கும்படி ரயில்வே அதிகாரிகளுக்கு உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

தென் ஆற்காடு, மதுரை மாவட்டங்களிலுள்ள ரயில்வே நிலையப் பொறுப்பாளர்களுக்கு ரயில்வே அதிகாரிகளிடமிருந்து இந்த உத்திரவு போய்ச் சேர சில நாட்கள் ஆகலாம். இந்த இரு மாவட்டங்களிலிருந்து அதன் பிறகு பர்மிட் அல்லது தடை எதுவுமின்றி தாராளமாக அரிசி ஏற்றுமதி செய்யப்படலாம். இதனால் சென்னையில் சில தினங்களில் அரிசி விலை குறையலாம்.

தஞ்சையிலிருந்து வாகனங்கள் மூலமும், சிதம்பரத்திலிருந்து லாரிகள் மூலமும் சென்னைக்கு அரிசி வந்துகொண்டிருக்கிறது. ரயில் வாகனங்கள் மூலம் அரிசி வர ஆரம்பித்தால், சென்னைக்கு அரிசி சப்ளை அதிகமாகி விலைகள் குறையலாம் என்று அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

ஆந்திராவிலிருந்து அரிசியை வெளியேற்ற முடியாமல் ஆந்திர சர்க்கார் தடுத்திருப்பதுதான், சென்னை நகரத்தில் அரிசி விலை உயர்ந்திருப்பதற்குக் காரணம்.

ஆந்திராவிலிருந்து சென்னைக்கு ஒதுக்கியிருக்கும் அரிசி இந்த வாரம் வர ஆரம்பிக்கலாம். இதனால் பச்சரிசி விலை குறையும். இப்பொழுதுள்ள விலைப்படி 1க்கு ரூ. 1—6—0 ஆக விற்கப்படுகிறது.

பிப். மாதத்துக்குள் ஒதுக்கியுள்ள இருபதினாயிரம் டன் அரிசிக்கு சென்னை சர்க்கார் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்திருப்பதால் இந்த அரிசி 10ந் தேதி வாக்கில் சென்னைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாவ்—மாவ் தலைவர் தூக்கிலேறுவார்!

நைரோபி, பிப். 3—

மாவ்—மாவ் பயங்கர இயக்க இரண்டாவது தலைவர் 'ஜெனரல் சீனா'வுக்கு கொடு மருந்து வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இவர் இக்குற்றச்சாட்டை மறுத்தார்.

நிலைமை திரும்புகிறது!

ரங்கூன், பிப். 5—

சீனாவுக்கும்—பர்மாவிற்குமிடையே வர்த்தக உடன்படிக்கை சீக்கிரமே கையெழுத்தாகும் என்றும், பர்மா—அரிசி, தேக்கு, பருத்தி முதலியவைகளை ஏற்றுமதி செய்யுமென்றும், சீனா பர்மாவுக்கு நிலக்கரி, துணிகள், இதர பொருள்களை அனுப்பும் என்றும் தெரிகிறது.

அரிஜனங்கள் தொழில் ஆரம்பிக்க கடன் உதவி

பாட்னா, பிப். 4—

அரிஜனங்கள் தொழில் ஆரம்பிப்பதற்காக ரூ 400 வீதம் 6 பேர்களுக்கு பீகார் சர்க்கார் கடன் உதவியளித்துள்ளது. குடிசைத் தொழில்கள் ஆரம்பிப்பதற்கான சாதனங்களைப் பெறுவதற்காகவே இத்தொகை அளிக்கப்பட்டிருக்கிறது.

முகவரி

சிற்றுளி ஏ. சுப்ரமணியம்,
1, வலையகுல சத்திரியர் தெரு,
சேலம் டவுன்.

கழகக் கூட்டங்கள்

★

அம்மாபேட்டை

6—2—54 மாலை 6 மணிக்கு

இடம்: சேணியர் பிள்ளையார் கோயில் முன்னுள்ள திடல்

தலைவர்: எம். எல். ராமசாமி

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்
எஸ். கே. பேபி, எம். பி.
வி. சிவப்பிரகாசம்
சிற்றுளி ஏ. சுப்பிரமணியம்
கே. ஏ. வேங்கடாசலம்
கே. பி. நஞ்சப்பன்
ஈ. ஆர். கிருஷ்ணன்

★

மணப்பாறை

7—2—54 மாலை 5 மணிக்கு

இடம்: சனி திறந்த வெளியரங்கு

பேசுவோர்:

மு. கருணாநிதி
சிவாஜி கணேசன்

★

ஓ. கொண்டலாம்பட்டி

7—2—54 மாலை 6-30 மணிக்கு

இடம்: ரேடியோ மைதானம்

தலைவர்: வி. பலராமன்

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு
ஈ. ஆர். கிருஷ்ணன்
கே. எஸ். அமிர்தம்

காந்தியார் நினைவு நாள் பொதுக்கூட்டம்

7-2-54 மாலை 5 மணிக்கு, பெங்களூர் R B A N M உயர்நிலைப் பள்ளி மைதானத்தில் தோழர் எச் எல். சித்தாராம் தலைமையில் தோழர்கள் காஞ்சி. கல்யாணசுந்தரம், கே. கண்ணன் ஆகியோர் பேசுவர்.

விளாப்பாக்கம் (வ. ஆ.) தி. மு. கழகம்

2-வது ஆண்டு விழாவும் பொங்கல் விழாவும்

8-2-54 காலை சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்படும். மாலை 5 மணிக்கு, தோழர் ஏ. எல். சி. கிருட்டிணசாமி தலைமையில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களும், மற்றும் பல தோழர்களும் பேசுவார்கள். அன்று இரவு பகுத்தறிவு மன்றத்தாரால் 'காதல் ஜோதி' நாடகம் நடைபெறும்.

வேலையில்லாத் திண்டாட்டம்—சர்க்கார் முயற்சி!

புதுடில்லி, பிப் 4—

கிராமத் தொழில்கள், சிறு கைத்தொழில்களுக்கான ஒரு ஆலோசனை இன்ஸ்டிடியூட் இந்திய சர்க்காரால் ஏற்படுத்தப்படவிருக்கிறது. இதனால், வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவுக்கு நீங்க உதவ முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

எம் எல். ஏ.க்கள் சொத்துக்கள் எவ்வளவு?

கட்டாக், பிப். 5—

எம். எல். ஏ.-க்கள், பெரிய சர்க்கார் அதிகாரிகள் இவர்களின் சொத்துக்களைச் சரி பார்க்கவும் கணக்கெடுக்க அதிகாரம் தரும் மசோதாவை ஒரிஸா சட்டசபையில், முக்கிய எதிர்க் கட்சி கொண்டுவரவிருக்கிறது. லஞ்சம் ஒழிப்பை உத்தேசித்தே இம் மசோதா கொண்டுவரப்படுகிறது.

சைதை தி. மு. கழகம்

தூத்துக்குடி சதி வழக்கு நிதிக் காட்சி

7—2—54 காலை 10 மணிக்கு

சைதாப்பேட்டை நூர்ஜகான் தியேட்டரில்

நடிகமணிகள்
எஸ். எஸ். இராஜேந்திரன்
டி. வி. நாராயணசாமி
ஆகியோர் முன்னிலையில்

"பராசக்தி"

நடைபெறும்.

பொதுச் செயலாளர்

அண்ணாதுரை சுற்றுப் பயணம்

★

பிப். 6: சென்னை
,, 7: மாலை திருப்பத்தூர் (வ. ஆ.) தூத்துக்குடி வழக்கு நிதி அளிப்புக் கூட்டம்
,, 8: கிருஷ்ணகிரி — தூத்துக்குடி நிதி அளிப்புக் கூட்டம்
,, 9: போளூர் (வ. ஆ.) தூத்துக்குடி நிதி அளிப்புக் கூட்டம்
,, 14: தென்னாற்காடு மாவட்டச் சார்பில், விழுப்புரத்தில் தூத்துக்குடி நிதி அளிப்புக் கூட்டம்
,, 15: சென்னையில்—திருமணம்
,, 16 முதல் 19 வரையில்: தஞ்சை மாவட்டம்: நாகப்பட்டணம், மன்னார்குடி, குடவாசல், கும்பகோணம் ஆகிய இடங்களில் தூத்துக்குடி நிதி அளிப்புக் கூட்டங்களுக்கும் அழைக்கப்பட்டிருக்கின்றார்கள்.
,, 21: மதுரை நகர் தி. மு. கழகப் பொதுக் கூட்டம். இரவு-நாடகம்
,, 22: பட்டிவீரன்பட்டி மறைந்த மாவீரர் ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன் அவர்கள் முதல் ஆண்டு நினைவு விழா—இரவு நாடகம் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்.
,, 28 முதல் மார்ச் 3 வரை சேலம் மாவட்டம் சுற்றுப் பிரயாணம்

நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகத் தோழர்கட்கு

"பொதுச் செயலாளர் அண்ணாதுரையின் வேண்டுகோளின்படி, ஒவ்வொரு மாவட்டமும் தூத்துக்குடி வழக்கு நிதிக்கு உதவி வருகிறது. நாமும் நமது பங்கைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அண்மையில் பொதுச் செயலாளர் இங்கு வரவிருக்கிறார். அதுபோது நமது பங்கைச் செலுத்தியாக வேண்டும். ஆகவே, கழகத் தோழர்களும், கழக அபிமானிகளும் தங்களாலான பொருளுதவியை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி, நமது மாவட்டத்தின் கடமையைச் செய்ய முன்வர வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்," என்று தோழர் குமாரவேல் கேட்டுக் கொள்கிறார்.

முகவரி:—ஏ. குமாரவேல், தூத்துக்குடி நிதி கன்வினர், பண்டி விலாஸ், கோட்டாறு, நாகர்கோயில்.

'நம் நாடு' வெளியூர் ஏஜண்டுகட்கு

★

'நம் நாடு' வெளியூர் ஏஜண்டு தோழர்கட்கு: 1954 ஜனவரி மாதப் பட்டியல் (பில்) அனுப்பியிருக்கிறோம். 10—2—54-க்குள் பில் பாக்கித் தொகையை இங்கு கிடைக்கும்படி அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

அதிகம் பாக்கியுள்ள தோழர்களிடமிருந்து, குறிப்பிட்ட தேதிக்குள் பாக்கித் தொகை வந்து சேராவிட்டால் 'நம் நாடு' அனுப்புவதையும் நிறுத்தி வைக்கப்படுமென்பதையும் அறிவித்துக்கொள்ளுகின்றோம்.

ஏஜண்டு இல்லாத வெளியூர்கட்கு, முன்பணத்துடன் (டிபாசிட் தொகையுடன்) விண்ணப்பங்கள் வருவதை மட்டும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

இராயபுரம், சென்னை
4-2—54

பொறுப்பாளர்,
'நம் நாடு'

கவர்னருக்குக் குமரன் காலண்டர் பரிசளிப்பு

—:-:—

கவர்னர் பாராட்டு

சென்னை, பிப். 5—

சென்னை அகில இந்திய காதி, சுதேசி பொருட்காட்சியில் 2-ந் தேதி மாலை 6 மணிக்கு சென்னை கவர்னர் வருகைத் தந்தார். காஞ்சீபுரம் குமரன் காலண்டர் தொழிற்சாலை ஸ்டாலில் அவருக்கு தினத்தாள் காலண்டர், சென்னை உறவிலைய பாதுகாப்பு மந்திரியால் வழங்கப்பட்டது. கவர்னர், காலண்டர் வேலைப்பாட்டைப் புகழ்ந்ததோடு, விலை மலிவாக உள்ளதென்றும், அதுவுமன்றியில், தனக்குப் பிரியமான காஞ்சீபுரத்தில் தயாராகுவதைக் குறித்து மகிழ்வதாயும் சொன்னார்.

* * *

3—2—54 இரவு 7 மணிக்கு பொருட்காட்சிக்கு வந்திருந்த 'நம் நாடு' பொறுப்பாளர் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்களையும் காஞ்சீபுரம் குமரன் காலண்டர் தொழிற்சாலை உரிமையாளர் தோழர் தவசி கு. திருநாவுக்கரசு அவர்களும், பிற தோழர்களும் வரவேற்று குமரன் காலண்டர் ஸ்டாலில் மலர் மாலை சூட்டினார்கள். போட்டோக் குரூப் ஒன்றும் எடுக்கப்பட்டுள்ளது.

எதிர் கால இந்தியாவில் ஆங்கிலம்

அண்ணாமலை நகர் மாநாட்டில் விவாதிக்கப்படும்

—::—

சென்னை, பிப் 4—

எதிர்கால இந்தியாவில், ஆங்கிலத்தின் நிலைமை என்ன என்பது குறித்து அண்ணாமலை நகரில் இம்மாதம் கூடவிருக்கும் புலவர்—எழுத்தாளர்—நாவலாசிரியர் மாநாட்டில் முக்கியமாக விவாதிக்கப்படவிருக்கிறது. டாக்டர் ராதாகிருஷ்ணன் மாநாட்டிற்குத் தலைமை வகிப்பார். சுமார் 150 பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொள்வர்.

தங்கத்தில் ரத்தினங்கள் இழைத்த உல்லாச கப்பல்

விற்பனைக்கு வருகிறது

கெய்ரோ, பிப். 4—

முன்னாள் மன்னர் பரூக்கின், புகழ் வாய்ந்த சொந்தக் கப்பல் விற்பனைக்கு வருகிறது. இதற்கு எகிப்திய சர்க்கார் 2 கோடி பவுன் கேட்கின்றனர். தங்கத்தில் ரத்தினங்கள் இழைத்த வேலைப்பாடுகளும், ஒய்யாரமான இருப்பிடங்களும் கொண்ட அதன் சுகபோகத்தை அனுபவிக்கும் வாய்ப்பு 1952 ஜூலையில், இத்தாலிக்கு ஓடியபோது தான் பரூக்குக்கு கிட்டியது. சிறு கட்டணத்தின் பேரில் இதைப் பார்க்க சில தினங்கள் அனுமதித்துவிட்டு, வெளிநாடுகளில் இதை வாங்க முன் வருவோருக்குக் காட்டுவதற்காக எடுத்துச் செல்லப்படும்.

கயானா தலைவர்களுக்கு மீண்டும் சங்கடம்

விமானங்கள் ஏற்றிச் செல்ல மறுக்கின்றன

லண்டன், பிப். 5—

முன்னாள் கயானா மந்திரிகள் செட்டி ஜெகனும், பர்ன்ஹாமும், நாடு திரும்ப மிகவும் கஷ்டப்படுவதாகத் தெரிகிறது. தோழியர் ஜெகனிடமிருந்து வந்த செய்திகளின் பேரில் இவர்கள் டச்சு விமானத்தில் பயணம் செய்ய ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால் விமான நிலையத்திலிருந்து புறப்பட 10 நிமிடத்திற்கு முன், டச்சு சர்க்கார் அவர்களை தங்கள் பகுதியின் இரவு நேரத்தில் தங்கக்கூடாதென தடை விதித்தார்கள்.

பிறகு மற்றொரு விமானத்திலும் இவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அமெரிக்க விமானத்தில் அவர்கள் செல்ல முடியாதாகையால் பி. ஓ. ஏ. விமானத்தில் போக முயற்சி செய்து வருகிறார்கள்.

5 ஆண்டுத் திட்டத்திற்கு 'சாது'க்கள் சேவையாம்!

இந்திய சர்க்கார் முயற்சி

புதுடில்லி, பிப். 5—

நாட்டிலுள்ள ஆயிரக் கணக்கான சாதுக்களை தேச நிர்மாண திட்டப் பிரசாரங்களுக்குப் பயன்படுத்திக்கொள்ள முடியுமா என்பது குறித்து இந்திய சர்க்கார் யோசித்து வருவதாகத் தெரிகிறது.

சாதுக்களை மக்கள் மரியாதையுடன் வரவேற்கின்றனராம்! அவர்கள் உபதேசங்களுக்குச் செவி சாய்க்கின்றனராம்! சாதுக்களில் பெரும்பாலோர் நன்கு கற்றறிந்தவர்கள் என்பதுடன் சொல்வன்மையும் படைத்தவர்களாம்! இவர்களைக் கொண்டு 5 ஆண்டுத் திட்டத்திற்கான பிரசாரத்தைச் செய்யும்படி கோரி மக்கள் ஒத்துழைப்பைப் பெறலாம் என்ற யோசனை இருந்து வருகிறது. இதுபற்றி, இந்தியக் குடியரசுத் தலைவர் சாது ஒருவருடன் பேச்சு வார்த்தை நடத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

அபாய அறிவிப்பா?

பாட்னா, பிப். 5—

"பீகாரில் மக்கள் தொகை நெருக்கடி அதிகரித்து வருகிறது. மேற்கு வங்கம், திருவாங்கூர்—கொச்சி இவைகளுக்கு அடுத்தபடி மக்கள் தொகை அதிகமுள்ள மாநிலம் பீகார்தான்; ஆகவே, குழந்தைகள் பிறப்பதை பீகார் வாசிகள் மட்டுப்படுத்த வேண்டும்," என்று பொருளாதார புள்ளி விவர டைரக்டர் கூறுகிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.